மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைப் பற்றி விரிவாகத் தீர்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : ஏராளமான ஆதாரங்கள் இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைப்பற்றி முடிவு தந்து விட்டபிறகு, அந்தக் கடிதம் உங்களால் எழுதப்படவில்லை என்று முடிவெடுத்தபிறகு அதைப்பற்றி விவாதம் தொடங்குவது முறை யல்ல.

(4) அறிவிப்புகள்.

(அ) ஆவணங்களைப் பேரவையில் படிப்பது குறித்தும், குற்றச்சாட்டுகள் சாட்டப்படுவது குறித்தும் பின்பற்றப் பட வேண்டிய முறைகள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மாண்புமிகு உறுப்பினர்கள் உரை நிகழ்த்தும் பொழுது ஏதாவதோர் ஆவணத்தைப் பேரவையில் படிக்கவேண்டு மெனில், அதனை முன்னதாகவே பேரவைத் தலைவரிடம் காட்டி, அவரது அனுமதியைப் பெற்ற பின்னரே படிக்க வேண்டும். அதிலும் முக்கியமாக, பேரவையின் உறுப்பினர் ஒருவரால் எழுதப்பட்ட கடிதம் அல்லது ஆவணம் ஒன்றைப் பேரவையில் படிக்க விரும்பினால், அதனைப் பேரவைத் தலைவர், யாரால் எழுதப் பட்டது என்று கூறப்படுகிறதோ அந்த உறுப்பினரிடம் காட்டி அதன் உண்மைத் தன்மையை உணர்ந்து அனுமதி வழங்கிய பின்னரே அவையில் படித்தல் வேண்டும்.

ஓர் உறுப்பினர் பேசும்பொழுது, வேறோர் உறுப்பினர் மீது குறிப்பிட்டு ஏதாவது குற்றம் சாட்ட விரும்பினால், அக்குற்றச் சாட்டைப் பேரவைத் தலைவரிடம் முன்னதாகவே கூறி, பேரவைத் தலைவர் அதைக் குற்றம் சாட்டப்படும் உறுப்பினருக்குத் தெரிவித்ததன் பின்னரே, அதற்கான அனுமதி வழங்குவார். அவ்வித அனுமதியின்றி, எந்த உறுப்பினரும் வேறொரு உறுப்பினர் மீது தமது உரையில் குற்றம் சாட்டுவது கூடாது.

1973 டிசம்பர் 1] *[பேரவைத் தலைவர்]*

இதுவே நாடாளுமன்றத்திலும் நமது சட்ட மன்றங்களிலும் பின்பற்றப்படும் மரபாகும். நேற்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்திலும் இந்த முறையைத் தவறாது பின்பற்ற வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. ஆகவே, உறுப்பினர்கள் இதனைக் கருத்திற்கொண்டு உரை நிகழ்த்துமாறு வேண்டுகிறேன்.

(2) நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி.

(ஆ) ஆவணங்கள் படிப்பது குறித்து பேரவைத் தலைவர் வகுத்த முறையைப் பின்பற்றுவது பற்றி.

டாக்டர் எச். வி. ஹாண்டே : மதிப்பிற்குரிய பேரவைத் தலைவரவர்களே, ஒரு ஒழுங்குப் பிரச்னையை உங்கள் அனுமதியின் பேரில் எழுப்ப விரும்புகிறேன். தாங்கள் தீர்ப்பு கொடுக்கும் பொழுது யாராவது ஒரு உறுப்பினர் இன்னொரு உறுப்பினருக்கு எழுதியிருந்தால், அதை எழுதிய உறுப்பினருக்குக் காட்ட வேண்டுமென்றும், அந்த உறுப்பினரின் அனுமதி பெற்றுத்தான் படிக்க வேண்டுமென்று தீர்ப்பளித்தீர்கள். ஆனால் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் ஒரு கடிதத்தைப் படிக்கும்பொழுது, உறுப்பினர் திரு. சௌந்தரபாண்டியன் அவர்கள் எழுதியதாக ஒரு கடிதத்தைப் படித்தார்.
alleged to have been written by Thiru P. Soundarapandian என்று காட்டினர். இங்கே படித்தார். அந்த நேரத்தில், உங்களுடைய தீர்ப்பிற்குக் கட்டுப்பட்டுத்தான் இருக்கிறோம் என்று சொல்வதற்காகத்தான் சொல்கிறேன். திரு. சௌந்தரபாண்டியன் அவர்களுடைய அனுமதியில்லாமல் படித்தார்கள். ஆகவே, தாங்கள் இப்பொழுது கூறியிருக்கும் முறையில் அமைச்சர்களுக்கு ஒரு ரூலிங், மற்ற உறுப்பினர்களுக்கு இன்னொரு ரூலிங் என்று இருக்கிறதா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பாயிண்ட் ஆப் ஆர்டர் இல்லை. நேற்று அலுவல் ஆய்வுக்குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவு இது. இந்த மன்றத்தில் இருக்கும் 234 உறுப்பினர்களுக்கும் இது பொருந்தும். அமைச்சர்களானாலும், கட்சித் தலைவர்களானாலும், எந்தக் கட்சி உறுப்பினர்களானாலும் அது எல்லோருக்கும் உரியதுதான். அடுத்து . . . .